நாள்: 26.08.2025

O.S. No.74/2023

**வா.சா.1**

**பெயர்: அமுதா, க/பெ.நாகேந்திரன்**

2 ம் **<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. தாவா சொத்து யாருக்கு சொந்தமான சொத்து என்றால் வேணுகோபால்பெருமாள் கோவிலுக்கு சொந்தமான சொத்து ஆகும். மேற்படி சொத்திற்கு யார் பெயரில் பகுதி பாத்தியதை உள்ளது என்றால் என் கணவர் நாகேந்திரன் பெயரில் பகுதியுள்ளது. என் கணவர் இறந்தபிறகு யார் பெயரில் பகுதியுள்ளது என்றால் என் பெயரில் பகுதியுள்ளது. கோவிலார் எவ்வாறு என் பெயருக்கு பகுதி பெயர் மாற்றம் செய்தார்கள் என்றால் நான் மனு அளித்தன் பேரில் பகுதி பெயர் மாற்றம் செய்தார்கள். மேற்படி மனு அளித்தது தொடர்பாக ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. 2 ம் பிரதிவாதியிடம் நான் எந்த வகையான மனுவும் கொடுக்கவில்லை என்றாலும், நாளது வரை என் கணவரான நாகேந்திரன் பெயரில் தான் பகுதி பாத்தியதை இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல. நான் முன்விசாரணையில் கூறியுள்ள பரிவர்த்தனை ஆவணம் எப்போது ஏற்பட்டது என்றால் முதலில் 2010-ல் பரிவர்த்தனை ஆவணம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் பதிவு செய்யப்படவில்லை. 2012-ல் பரிவர்த்தனை ஆவணம் ஏற்படுத்தப்பட்டு, பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. 2012-ல் ஏற்பட்ட பரிவர்த்தனை பத்திரம் யாருக்கிடையே ஏற்பட்டது என்றால் எனக்கும், 2 ம் பிரதிவாதியான கோவிலாருக்கும் இடையே ஏற்பட்டது ஆகும். மேற்படி பதிவு பரிவர்த்தனை பத்திரத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி பரிவர்த்தனை பத்திரத்தில் என் சொத்துக்கள் பி ஷெட்டியூல் சொத்துக்கள் ஆகவும், கோவிலார் சொத்துக்கள் ஏ ஷெட்டியூல் சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளதா என்றால் சரிதான்.

4. மேற்படி ஏ ஷெட்டியூல் சொத்துக்கள் என் அனுபவத்தில் தான் நாளதுவரை இருந்து வருகிறது என்றால் சரிதான். எனக்கு சொந்தமான பி ஷெட்டியூல் சொத்துக்கள் கோவிலார் வசம் நாளது வரை ஒப்படைக்கப்படவில்லை என்றாலும் நாளது வரை என் வசம் இருந்து வருகிறது என்றாலும் சரிதான். என் தரப்பில் தாக்கல்

செய்யப்பட்டுள்ள பரிவர்த்தனை பத்திரமான வா.சா.ஆ.2 ஆவணம் பதிவு செய்யப்படா ஆவணம் என்பதால் சட்ட நிலையில் ஏற்புடைய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல.

5. மேற்படி, வா.சா.ஆ.2 பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் அதில் கண்ட 2ம் பிரதிவாதி சொத்துக்கள் பொறுத்து எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் ரூ.25,00,000/- தொகை கொடுத்து கிரயம் பெற்றுள்ளேன். நான் மேற்படி ரூ.25,00,000/- தொகையை 2ம் பிரதிவாதியிடம் கொடுத்தற்கு ரசீது பெறப்பட்டதா என்றால் அக்ரிமெண்ட் போட்டுக்கொண்டோம். நான் கூறுவது அக்ரிமெண்ட் எதுவும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றாலும், அவ்வாறு தொகை பெற்றுக்கொண்டு அக்ரிமெண்ட் ஏற்படுத்திக்கொள்ள 2ம் பிரதிவாதி சட்டநிலையில் தடைப்பட்டுள்ளார் என்றாலும் சரியல்ல.

6. தாவா சொத்துக்களுக்கு பகுதிதாரராக இருந்த என் கணவர் காலமாகிவிட்ட நிலையில் பகுதி நிலையும் அற்றுபோய்விட்டது என்றாலும் தாவா சொத்துக்களின் மீது எனக்கு எவ்வித பகுதி நிலையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு அருகாமையில் எனக்கு சொந்தமான இதர சொத்துக்கள் உள்ளதா என்றால் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீது மற்றும் மின் கட்டண ரசீதுகள் தாவா சொத்துக்களுக்கு உரியவை அல்ல என்றாலும், எனக்கு சொந்தமான தனிப்பட்ட சொத்துக்களுக்கு உரியவை என்றாலும் சரியல்ல.

7. 2ம் பிரதிவாதியால் என் பெயருக்கு பகுதி பெயர் மாற்றம் செய்ய எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை என்றாலும், அவ்வாறு பெயர் மாற்றம் செய்யப்பட்டிருந்தால் அதற்கான அனுமதி கடிதம் வழங்கப்பட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி ஆனந்தவாசகன் என்பவருக்கும் எனக்கும் எந்தவித ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் அவரிடம் நான் கடன் பெற்றிருந்தேன். கடன் தொகை பூராவையும் கொடுத்து தீர்த்துவிட்டபோதும், கூடுதல் வட்டி தொகை கேட்டு, தாவா சொத்துக்களை எழுதி தர பிரச்சனை செய்ததால் அதனை மறுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

8. எனக்கும் 1ம் பிரதிவாதி ஆனந்தவாசகனுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக 2ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றாலும், அது 2ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றாலும், 1ம் பிரதிவாதிக்கும் எனக்கும் இடையே ஏற்பட்ட கடன் பிரச்சனை தொடர்பாகவும், இந்த 2-ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியிடம் 2 ம் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்துக்களை பொறுத்து ஒப்பந்தம்

எதுவும் இந்த 2ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு என் கணவர் இறந்த பிறகு என் பெயரில் பகுதி மாற்றம் ஏற்படவில்லை என்றாலும், என்னால் பகுதி அனுபவம் செய்து வரப்படவில்லை என்றாலும், என்னால் சரிவர பகுதி செலுத்தி வரப்படாத காரணத்தால் சொத்துக்களை மீட்க 2ம் பிரதிவாதி நடவடிக்கை எடுத்து வருவதை தடுப்பதற்காகவே இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9. நான் 2ம் பிரதிவாதி திருக்கோவிலுக்கு என் கணவர் இறந்த பிறகு எந்தவிதமான பகுதி செலுத்தவில்லை என்றாலும், அவ்வாறு செலுத்தப் பட்டிருந்தால், 2ம் பிரதிவாதியால் பகுதி ரசீது வழங்கப்பட்டு, அவை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு எதிராக நான் காவல் நிலையத்தில் எவ்வித புகாரும் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 2ம் பிரதிவாதிக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோரப்படவில்லை என்பதால் இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி தேவையற்ற தரப்பினர் என்றால் சரியல்ல.

10. 2ம் பிரதிவாதியை பொறுத்து இவ்வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி சொத்தின் உரிமையாளர் என்பதால் அவருக்கு எதிரான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிய வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியுடன் ஒன்று சேர்ந்துக்கொண்டு 2ம் பிரதிவாதியின் உரிமைகளுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.08.26 18:37:53 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவாரூர்.